**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SANKARANKOVIL.

Calender ---

Miscellaneous --- CC No. 338/2020
Preliminary Register ---

PW4
Deposition of witness for

Name : செல்வராணி

Father's Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

20.06.2025

**( A3 died. Others absent Petition U/s 317 Cr.P.C. filed and allowed. )**

முதல் விசாரணை:

நான் தற்போது சேலம் மாநகரம் சூரமங்கலம் மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு நான் குருவிகுளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது 21.09.2013ம்தேதி மாலை 3.00 மணியளவில் காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த போது செவல்குளம் மேலத்தெருவை சார்ந்த சுப்பிரமணியத்தேவர் மகன் பழனிச்சாமி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று மேற்படி காவல் நிலைய குற்ற எண். 171/2013 சட்டப்பிரிவுகள் 465,468,471, 420 இதச கீழ் வழக்கு பதிவு செய்து புகார் வாக்குமூலம் மற்றும் அசல் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பியும்,மற்ற நகலை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும்,

விசாரணை நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

புகார்மனுவில் உள்ள எழுத்தும், புகர்தாரரின் கையெழுத்தும் வெவ்வேறாக உள்ளது என்றால் காவல் நிலையத்திற்கு வரும்போதே புகார்மனுவை எழுதிக்கொண்டுவந்தார். கடந்த 05.09.2013 ம்தேதி ஏற்கனவே ஒரு புகார் கொடுத்து அதில் நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் குற்றம் நடந்ததாக சொல்லப்பட்டுள்ள தேதி 28.08.2013 என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தேதி 21.09.2013 என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பிய தேதி 25.09.2013 என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய ஏற்பட்ட 24 நாட்கள் காலதாமதத்திற்கான காரணம் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் வாதியால் தாமதம் என்று சொல்லப்பட்டுள்ளது. நான் சொல்லக் கூடிய நாள் நேரத்தில் புகார் மனுவை பெற்று வழக்கு பதிவு செய்ததாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. புகார் மனுவை வைத்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான்.எந்தவிதமான ஆவணமும் என்னிடம் காட்டவில்லை என்றால் சரிதான் ஆய்வாளரிடம் கொடுத்திருப்பார்.